13.03.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.(ஒ.எஸ்.எண். 196/2019) திரு.பெருமாள்சாமி.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–

1,2 பிரதிவாதிகள் கந்தசாமி நாயக்கரின் வாரீசுகள் என்றால் சரிதான். தபசில் சொத்தை 3ம்பிரதிவாதி கிரையம் வாங்கியதால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 3ம்பிரதிவாதி இந்த வழக்கை மேல்நடத்தி வருகிறா என்றால் நடத்தி வருகிறார். 3ம்பிரதிவாதி ஒருதலை பட்சமாக்கப்பட்டுள்ள விவரம் எனக்குத்தெரியாது என்றால்தெரியாது. பிராதில் பல விசையங்கள் சொல்லப்பட்டுள்ளது அந்த விவரங்கள் எப்படி தெரியும் என்றால் அவர்கள் வீட்டில் எனது அப்பா 30 ஆண்டுகளாக வேலைபார்த்து வந்ததால் ரிக்கார்டுகள் பற்றி தெரியும். நேரிடையாக எனக்குத்தெரியாது என்றால் 1969ல் நான் பிறக்கவில்லை எனது அப்பாவிற்கு நன்றாகத்தெரியும். தபசில் சொத்தை இராமசாமி நாயக்கரிடமிருந்து 1,2 பிரதிவாதிகளின் தந்தை கந்தசாமி நாயக்கர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் இல்லை. சொத்தை கிரையம் பெற்ற ஜெயலலிதாவின் பாட்டி லெட்சுமியம்மாள். பிராது சாட்சியடம் காண்பிக்கப்பட்டு அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். எனது வழக்குரை 3ம்பக்கம்இராமசாமி நாயக்கரிடமிருந்து 1,2 பிரதிவாதிகள் தந்தை கந்தசாமி நாயக்கரின் பெயரில் 1969ல் தபசில் சொத்தானது கிரையம் வாங்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளின் தந்தை கந்தசாமி நாயக்கரின் அண்ணன் பெயர் கிருஷ்ணசாமி நாயக்கரா என்றால் ஆமாம். கிருஷ்ணசாமி நாயக்கரின் மனைவி பெயர் தான் லெட்சுமியம்மாள் என்றால் ஆமாம். லெட்சுமியம்மாள் மகள் பெயர் கனகம்மாள் . கனகம்மாளின் மகள் தான் 3ம்பிரதிவாதி ஜெயலலிதா என்றால் சரிதான். எனது பிராதில் கிருஷ்ணசாமி நாயக்கர் மது அருந்துவார் என்று சொல்லியுள்ளது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி நாயக்கர் மதுபழக்கத்தில் இருந்திருந்தால் அவரது மனைவியான லெட்சுமியம்மாள் பெயருக்குதபசில்சொததை கிரையம் முடித்திருக்கலாம் அதற்கு மாறாக கந்தசாமி நாயக்கரின் பெயரில் கிரையம் பெற்றதாக பிராதில் சொல்லியுள்ளது தவறுஎன்றால் சரியல்ல. தபசில் சொத்திற்கு கந்தசாமி நாயக்கரின் பெயரில் பத்திரம் உள்ளது ஆனால் அந்த சொத்து எங்களுக்குப் பாத்தியப்பட்டது என்று வழக்குதாக்கல் செய்துள்ளோம்என்றால் சாட்சி தானாக சொத்து வாங்கியது சிதம்பரம்பட்டியில் அன்றைய தேதியிலிருந்து லெட்சுமியம்மாள் பெயரில்

அனுபவம்செய்து தீர்வை செலுத்தி வருகிறார்கள் அதன்பின்னர் கனகம்மாள் பெயரில் யூ.டி.ஆரில்பட்டாமாற்றம்செய்து தீர்வை செலுத்தி வந்தார்கள். கந்தசாமி நாயக்கர் பணம் போட்டு கிரையம்பெற்று தீர்வை செலுத்தியிருப்பார், கனகம்மாள்பெயரில் பட்டா மாற்றம் செய்யக்கோரி கந்தசாமி நாயக்கர் பெயரையும் அப்போது இடையூறு செய்யவில்லை. கனகம்மாள் கணவர் இராஜையா இறந்ததை அதே புஞ்சையில் அடக்கம்செய்யப்பட்டது அப்போது அவர்கள் நினைத்தால் அடக்கம் செய்யக்கூடாதென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கலாம். அவர்கள் வீட்டில் ஆண் வாரீசு இல்லை. கந்தசாமி நாயக்கர் வழக்கு நடத்தவில்லை என்றும், காசிராஜ் தான் வழக்குநடத்தி வருகிறார் என்று கூறுகிறார். பிராதில் இல்லாத சங்கதிகளை நான் கூறுகிறேன் என்றால் அது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கந்தசாமி நாயக்கர், லெட்சுமியம்மாளுக்கும் தாவாச்சொத்து சம்பந்தமாக வாய்மொழி ஒப்பந்தம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. சாட்சியிடம் பிரதிவாதி தரப்பில் காண்பிக்கப்பட்ட ஆவணத்தை சரிதான் அதற்கு முன்புள்ள ரசீது என்வசம் உள்ளது என்று சாட்சியம் அளிக்கிறார். அந்த ஆவணம் வருவாய் கோட்ட அலுவலகம் கோவில்பட்டி 08.11.2008 ம் தேதியிட்ட குறிப்பாணை **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பில்அந்த ஆவணத்தில் அலுவலக முத்திரை இல்லையென ஆட்சேபனைக்குட்டு குறியீடு செய்யப்படுகிறது). வருவாய்கோட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா எண்.813 சுப்பா நாயக்கர் மகன் கந்தசாமி நாயக்கர் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்று சொன்னால் தெரியாது. ஆதியில் பட்டா எண்.813 என்பது சுப்பா நாயக்கர் மகன் கந்தசாமி நாயக்கர் பெயரில் இருந்தது என்றால் தெரியாது. பட்டா எண்.813 டி.ஆர்.கோர்ட்டில் பரிசீலசை செய்யப்பட்டது என்றால் தெரியாது. தபசில் சொத்து முழுமையாக கந்தசாமி நாயக்கருக்குப் பாத்தியப்பட்டது என்றும் நாங்கள் அதை இடையூறு செய்ததால் கந்தசாமி நாயக்கர் 2008 ஆம்ஆண்டும் அதற்கு முன்பு முறையாக ஆட்சேபனை செய்து வந்துள்ளார் என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,

13.03.2024.